<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : STC. 906/2023**

**Prosecution Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரேம்நாத் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 04/07/2025

மனுதாரரை மீண்டும் அழைத்து விசாரிக்க எதிரி தரப்பில் மனு செய்து அது அனுமதிக்கப்பட்டு தற்போது குறுக்கு விசாரணை

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

எதிரி எனக்கு நண்பரா என் தந்தைக்கு நண்பரா என்றால், என் தந்தையின் நண்பர் ஆவார். என் தந்தையுடன் எதிரி சீட்டு ஏதேனும் சேர்ந்தாரா அல்லது பணம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தாரா என்றால், எதுவுமில்லை. எனக்கும் எதிரிக்கும் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்றால், எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதால் 10 வருட காலமாக பழக்கம் இருந்தது. அந்த பத்து வருட காலத்தில் எனக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால், இல்லை. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறேன் என்றால், 4,50,000/- கொடுத்திருப்பதை கேட்டிருக்கிறேன். எந்த இடத்தில் வைத்து யாரிடம் மேற்படி தொகையை கொடுத்தேன் என்றால், மே 5, 2022ல் என்னுடைய வீட்டில் வைத்து என் தந்தை அப்போது இருந்தார். அப்போது எதிரிக்கு கொடுத்தேன்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

என் தந்தையிடம் எதிரி அச்சமயம் ஏதேனும் பணம் பெற்றிருந்தாரா என்றால், இல்லை. பணம் எதிரிக்கு கொடுக்க சொல்லி என் தந்தை ஏதேனும் பரிந்துரை செய்தாரா அல்லது நானே கொடுத்தேனா என்றால், என் தந்தை பரிந்துரை எதுவும் செய்யவில்லை. நான் தான் எதிரிக்கு கொடுத்தேன். எந்த நேரத்தில் கொடுத்தேன் என்றால், சுமார் மாலை 6 மணி இருக்கும். பணம் கொடுத்ததற்கு நான் எதிரியிடமிருந்து ஏதேனும் ஆவணம் எழுதி பெற்றேனா என்றால், இல்லை. எந்த வகையில் மேற்படி பணத்தை கொடுத்தேன் என்றால், ரொக்கமாக தான் கொடுத்தேன். எந்த டினாமிநேசனில் கொடுத்தேன் என்றால், 500 ரூ தாள்களில் கொடுத்தேன். எதிரி பணம் பெறும் போது அதற்கு பொறுப்பாக வேறு எந்த ஆவணமும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நம்பிக்கையின் பேரில் தான் பணம் கொடுக்கப்பட்டது.

அதன்பின்பு நான் எதிரியிடம் அசலைக் கேட்டேனா அல்லது வட்டியை கேட்டேனா என்றால், வட்டியை கேட்கவில்லை. கைமாற்றாக கொடுத்த அசலை மட்டும் தான் கேட்டேன். வட்டிக்கு நான் பணம் கொடுக்கவில்லை. எத்தனை காலம் அவர் பணம் கொடுக்காமல் நாட்கள் கடத்தினார் என்றால், 3 மாதத்தில் தருவதாக சொன்னவர், 8 மாதங்கள் கழித்தும் தராமல் இருந்தார். எந்த வகையில் எனக்கு மேற்படி ரூ.4,50,000/– கிடைத்தது என்றால், நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்ததால் கிடைத்தது. அந்த தொகையை நான் என்னுடைய வங்கியில் வைத்திருந்தேனா என்றால், இல்லை. கையில் வைத்திருந்தேன்.

பணம் திரும்ப கொடுக்குமாறு எதிரி வீட்டிற்கு சென்று கேட்டிருக்கிறேனா என்றால், இல்லை. எங்கள் வீட்டிற்கு அவர் வரும் போது கேட்டேன். பணம் திரும்ப கொடுக்காததால் எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால், இல்லை. அவர் மீது நான் காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எப்போது அவர் எனக்கு பணத்திற்காக காசோலை கொடுத்தார்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

என்றால், 23.01.2023 ல் கொடுத்தார். அது எந்த வங்கியின் காசோலை என்றால், ஆந்திரா வங்கி ஆகும். அந்த காசோலை எனக்கு வழங்கும் போது சாட்சி யாரும் இல்லையென்றால், சரிதான். அந்த காசோலையின் எண் என்னவென்றால், 000002 ஆகும். எத்தனை காசோலைகளை் கொடுத்தார் என்றால், ஒரு காசோலை கொடுத்தார். எதிரி என்னிடம் மட்டும் தான் கடன் பெற்றார் என்றால் சரிதான். தற்போது வரை அவர் எங்கள் வீட்டு வேறு நபர்களிடம் கடன் பெறவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA